முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களான டாக்டர் நாரணவரே மனிஷ் ஷங்கர்ராவ், (திருப்பூர் மாவட்டம்), வே. சரவணன், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கே.ஜே. பிரவீன்குமார், (மதுரை மாவட்டம்), டாக்டர் என். ஓ. சுகபுத்ரா, (விருதுநகர் மாவட்டம்), ச. கந்தசாமி, (ஈரோடு மாவட்டம்), திருமதி துர்கா மூர்த்தி, (நாமக்கல் மாவட்டம்), திருமதி கா. பொற்கொடி, (சிவகங்கை மாவட்டம்) ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 59 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள், 2 ஆயுர்வேதா உதவி மருத்துவ அலுவலர்கள், 1 யுனானி உதவி மருத்துவ அலுவலர், 53 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவ அலுவலர்கள்/விரிவுரையாளர்கள் (நிலைII) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 57 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை3 ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 172 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறையில் உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின்படி தற்போதுள்ள 10+5+10 ஆண்டுகள் என்ற காவலர்களுக்கான நிலை உயர்த்துதலை மாற்றி 10+3+10 என்று நிர்ணயம் செய்து, மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல்நிலை காவலர்கள் மற்றும் காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களிலிருந்து 11 முதல்நிலை காவலர்கள், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவிநிலை உயர்வு ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் (நிர்வாகம்) ஜி. வெங்கட்ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அறிவாலயத்தில் நடைபெற்ற கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார். உடன் கழக இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றினார். உடன் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 59 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள், 2 ஆயுர்வேதா உதவி மருத்துவ அலுவலர்கள், 1 யுனானி உதவி மருத்துவ அலுவலர், 53 யோகா மற்றும் இயற்கை மருத்துவ உதவி மருத்துவ அலுவலர்கள்/விரிவுரையாளர்கள் (நிலைII) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 57 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 172 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி எம். விஜயலட்சுமி, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தலைவர் திருமதி பி. உமா மகேஸ்வரி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கூடுதல் இயக்குநர் மரு. த.கா. சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறையில் உறுதியான பணி முன்னேற்றத் திட்டத்தின்படி தற்போதுள்ள 10+5+10 ஆண்டுகள் என்ற காவலர்களுக்கான நிலை உயர்த்துதலை மாற்றி 10+3+10 என்று நிர்ணயம் செய்து, மாநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 10 முதல்நிலை காவலர்கள் மற்றும் காவல் சரகத்திற்குட்பட்ட மாவட்டங்களிலிருந்து 11 முதல் நிலை காவலர்கள், என மொத்தம் 21 முதல்நிலை காவலர்களுக்கு தலைமை காவலர்களாக பதவிநிலை உயர்வு ஆணைகளை வழங்கி, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் (நிர்வாகம்) ஜி. வெங்கட்ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.6.2025) தலைமைச் செயலகத்தில், சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், காவல் துறை இயக்குநர் (நிருவாகம்) ஜி. வெங்கட்ராமன், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) சௌ. டேவிட்சன் தேவாசிர்வாதம், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில்

ரூ.3.64 கோடியில் பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

தென்காசி.ஜூலை, 1- தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதி திரு வேங்கடம் வட்டாட்சியர் அலுவலக திறப்பு விழா நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று வட்டாட்சியர் அலுவலகம் உள்பட ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து பல்வேறு துறைகளின் மூலம் ரூ. 4.00 கோடி மதிப்பீட்டில் புதியபணி களுக்கு அடிக்கல் நாட்டினார். அதாவது ரூபாய் 7.64 கோடி மதிப்பிலான பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.06.2025 அன்று திறப்பு விழா நிகழ்வு மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்வு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு துறைகளின் மூலம் எண்ணற்ற திட்டங்களை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் மக்களுக்கென பல்வேறு சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை வழங்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் திருவேங்கடத் தில் ரூ.2.61கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள் ளது.சங்கரன்கோவில் வட்டம் பந்தப்புளி கிராமத்தில் AGAMT-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடையும்,பெரியூர் கிராமத்தில் AGAMT-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.45 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், புன்னைவனம் கிராமத்தில் MGNREGS-2023-24 திட்டத்தின் கீழ் ரூ.9.32 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், அரியநாயகிபுரம் ஊராட்சி அருணாசலபுரம் கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், குருவிகுளம் வட்டம் வடக்கு குருவிகுளம் கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், வெள்ளாளகுளம் கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.97 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடையும், தெற்கு குருவிகுளம் ஊராட்சி அழகனேரி கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.97 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், வெங்கடாசலபுரம் ஊராட்சியில் ஆண்டிப்பட்டி கிராமத்தில் MLACDS -2023-24 திட்டத்தின் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடையும், மேலநீலிதநல்லூர் வட்டம் சின்னகோவிலான்குளம் ஊராட்சியில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் முதலமைச்சர் அவர்களின் நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை ஊர்தி சேவையினையும்,மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 30 பயனாளிகளுக்கு ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 50 சதவீதம் மானியத்திலும், வருவாய்த்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு ரூ.7.71 இலட்சம் மதிப்பிலான வரன்முறை பட்டாக்களுக்கான ஆணையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 03 பயனாளிகளுக்கு ரூ.40,500/-மதிப்பிலான திருமண நிதி உதவித்தொகைகளும்,04 பயனாளி

களுக்கு ரூ.90,000/- மதிப்பிலான இயற்கை மரண உதவித் தொகை களும்,மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் 75 பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது.என மொத்தம் 122 பயனாளிகளுக்கு ரூ.17.71 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறையின் மூலம் வாசுதேவநல்லூர் தேர்வு நிலை பேரூராட்சியில் அடிப்படை கட்டமைப்பு நிதி திட்டம் 2024- 2025 இன் கீழ் பூலான்குளம் செல்லும் சாலையில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு பொதுமக்கள் பயனடைவார்கள்.எல்லோருக்கும் எல்லாம் அதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

இவ்வாறுஅமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில்,மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன்,குருவிகுளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் விஜயலெட்சுமி, திருவேங்கடம் வட்டாட்சியர் செல்வக்குமார், செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) அனிட்டா சாந்தி, வாசுதேவநல்லூர் பேரூராட்சிமன்ற தலைவர் லாவண்யா,பேருராட்சி செயல் அலுவலர் பதுருனிஷா, ஒன்றியச் செயலாளர்கள் கடற்கரை சேர்மதுரை, பெரியதுரை, நகர செயலாளர் பிரகாஷ், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.